# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **321/2016**

ஆணை எண். **193/2016**

நாள் : **03/12/2016**

**திருமதி பங்கஜம்,**
**திருச்சிராப்பள்ளி – 05.** **– முறையீட்டு மனுதாரர்**

**உதவி ஆணையர்,**
**ஸ்ரீரங்கம் கோட்டம்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,**
**திருச்சிராப்பள்ளி.** **– எதிர் மனுதாரர்**

திருச்சிராரப்பள்ளி, திருவானைக் கோயில், ஸ்ரீனிவாச நகர், 5–வது தெரு, பழைய கதவு எண்.10, புது கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி பங்கஜம் என்பவரின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.04.2016 அன்று பெறப்பட்டு, 321/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராரப்பள்ளி, திருவானைக் கோயில் ஸ்ரீனிவாச நகர், 5–வது தெரு, பழைய கதவு எண்.10, புது கதவு எண்.33 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி பங்கஜம் என்பவர், பாகம் பிரிக்கப்படாத தனக்கு சொந்தமான பகுதி நிலத்தை திரு V. ராஜசேகர் என்பவர் திருமதி மல்லிகா என்பவரிடம் போலி ஆவணம் மூலம் கிரயம் பெற்று, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருகின்றார் என்றும் அனுமதியின்றி கட்டப்பட்டுவரும் கட்டிடத்தை தடுத்து நிறுத்தத் தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் கட்டிடத்தை இடிக்க உத்தரவிடக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

/2/

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக ஸ்ரீரங்கம் கோட்ட மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. 26.05.2016 நாளிட்ட தனது கடிதத்தில், திரு ராஜசேகர் என்பவர் கட்டியுள்ள அனுமதியற்ற கட்டிடத்தின் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 296(1) மற்றும் (2) ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் திரு ராஜசேகர் அவர்களது திட்டம் மற்றும் கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பம், வரைபட திட்டம் மற்றும் கட்டிட விதிகளை மீறி உள்ளதால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். 27.07.2016 அன்று ஸ்ரீரங்கம் மண்டல உதவி ஆணையர், உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது மேலே தெரிவிக்கப்பட்ட அறிக்கையை உறுதிசெய்ததுடன் நீதிமன்றத்தில் குற்றநடவடிக்கை மேற்கொண்டதற்கான ஆதாரத்தையும் தாக்கல் செய்வதாகவும் தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி நகர குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த குற்றத்தாளினையும் இம்முறைமன்ற நடுவத்தின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. 11.03.2016 அன்று கையொப்பமிடப்பட்ட மேற்படி குற்றத்தாள் 27.05.2016 அன்றுதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

3. 29.08.2016 அன்று மனுதாரரும் விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது திரு இராஜசேகர் என்பவர் அனுமதியில்லாமல் தங்களது இடத்தில் கட்டிடம் கட்டி வருவதாகவும் இது சம்பந்தமாக மாநகராட்சி மற்றும் காவல் நிலையத்தில் புகார் செய்தும், எல்லோரும் திரு ராஜசேகருக்கு ஆதரவாகவே செயல்படுகிறார்கள் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களது வாக்குமூலங்கள் மற்றும் அவர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டன. பாகம் பிரிக்கப்படாத சொத்தில் பகுதி நிலத்தை 28.09.2015 நாளிட்ட ஆவண எண்.2794/15 மூலம் திரு இராஜசேகர் என்பவர் கிரயம் பெற்றுள்ளார். கிரயம் பெற்ற நிலத்தில் கட்டுமானப் பணியை 2016 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே தொடங்கியுள்ளார். அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டு வருவது குறித்து மாநகராட்சி ஆணையரின் கவனத்திற்கு 05.02.2016 நாளிட்ட கடிதம் மூலம் திரு தனபாலன் என்பவர் கொண்டு வந்துள்ளார். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரும் தனது 11.02.2016 நாளிட்ட கடிதத்தில் மாநகராட்சி விதிகளுக்கு மாறாக கட்டிடம் கட்டி வருவதாகவும், அனுமதியின்றி புதிதாக கட்டியுள்ள கட்டிடங்களை உடனே இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று திரு இராஜசேகர் அவர்களுக்கு அறிவிக்கை (Notice) அனுப்பியுள்ளார். மேலும் கட்டிடம் கட்டுவதை தடுத்து நிறுத்த காவல் துறை ஆய்வாளரின் ஒத்துழைப்பையும் நாடியுள்ளார்.

5. இந்நிலையில், தான் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு திட்டம் மற்றும் கட்டிட அனுமதி வழங்கக்கோரி 15.02.2016 நாளிட்ட விண்ணப்பத்தில் திரு இராஜசேகர் அவர்கள் மாநகராட்சிக்கு விண்ணப்பித்துள்ளார். திரு இராஜசேகர் அவர்களின் கட்டிடம் அனுமதி கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு 19.02.2016 நாளிட்ட கடிதத்தில் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 11.02.2016 நாளிட்ட மாநகராட்சி ஆணையரின் அறிக்கைக்கு திரு இராஜசேகர் எந்தவித பதிலும்

தெரிவிக்காத நிலையில், அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடம் மாநகராட்சிப் பணியாளர்களைக் கொண்டு அப்புறப்படுத்தி, அதனால் ஏற்படும் செலவினத்தை திரு இராஜசேகர் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுமென அவருக்கு **11.02.2016** நாளிட்ட UAC No.**9/2016** அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையரின் நடவடிக்கைக்கு பணியாமல் கட்டிடப்பணியை தொடர்ந்து மேற்கொண்டுள்ளார். மேலும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு C. தனபாலன் என்பவர் தாக்கல் செய்த வழக்கு எண்கள் WP.No.4504/2016 மற்றும் WMP.No.4080/2016-ல் 07.03.2016 நாளிட்ட ஆணையில் "In a matter pertains to unauthorised construction, when action has already been taken by the competent authority in exercise of the powers under the City Municipal Corporation Act, for demolition or alteration of the building as the case may be, person against whom action is taken should also be given an opportunity to put forth his objections against such action taken " என குறித்துரைத்துள்ளது (observed).

6. திரு இராஜசேகர் அவர்களின் கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பம் மாநகராட்சியால் நிராகரிக்கப்பட்ட விவரம் **19.02.2016** நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் நிராகரித்த பின்பே கட்டிடம் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையருக்கு மாநகராட்சி சட்டத்தில் போதிய அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடப்பணியை தடுத்து நிறுத்த தவறியுள்ளார். மாநகராட்சி சட்டப்பிரிவு **296(3)**ல்

> " if the owner or the occupier fails to show cause to the satisfaction of the commissioner, the commissioner may confirm the order with any modifications he may think fit to make and such order shall then be binding on the owner or the occupier ".

மேலும், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தை அகற்றுவதற்கு மாநாகராட்சி மேற்கொண்ட நடவடிக்கையை எதிர்த்து தொடரப்பட்ட நீதிப்பேராணை எண்.**11577/1985**–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் **16.12.1985** அன்று வழங்கிய தீர்ப்பில் "Action of Corporation **not arbitrary or whimisical" Imposition of fine, not a bar** for taking action for demolition" என குறித்துரைத்துள்ளது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட மாநகராட்சி சட்டப்பிரிவுகள் மற்றும் மாநகராட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளை கூர்ந்து நோக்குகையில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மாநகராட்சி விதிகளை நடைமுறைப்படுத்துபவர்களாக செயல்படாமல் தவறு செய்பவர்கட்கும், விதிகளை மீறுபவர்கட்கும் துணைபோய் உள்ளனர். மாநகராட்சி விதிகளை செயல்படுத்தும் அதிகாரிகளாக செயல்படாமல் வெறும் பார்வையாளர்களாக செயல்பட்டு மனுதாரரின் புகாரின் மேல் உரிய நடவடிக்கையை குறித்த நேரத்தில் எடுக்காமல் விதிகளை மீறுபவருக்கு துணை போய் உள்ளனர் என்று புலனாகிறது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் அறிவிப்பு அனுப்பிய பின்பே செயல்படுவது போல் காட்டிக்கொள்வதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

/4/

என இம்முறைமன்ற நடுவம் உறுதியாக கருதுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட பகுதியின் மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் இந்நேர்வினை மாநகராட்சி ஆணையர் நேரிடையாக ஆய்வு செய்து மாநகராட்சி கட்டிட விதிகள் மற்றும் இதுபோன்ற நேர்வுகளில் சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல்கள் அடிப்படையில் சட்டபூர்வ நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இந்நேர்வில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து 2 மாதகால அவகாசத்திற்குள் விரிவான அறிக்கையும் சமர்ப்பிக்கும்படியும் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

2/1/2017

செயலாளர்.

2.1.17

2.1.17

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி,

திருமதி பங்கஜம்,
ப.க.எண். 10, புது கதவு எண்.33,
5–வது தெரு, சீனிவாசன் நகர்,
திருவானைக் கோயில்,
திருச்சி –05.